## ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் சாரதி சேவை தரம் III இற்கு வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2026

1. ஊவா மாகாண சபை அரசாங்க சேவையில் சாரதி சேவை தரம் III இல் வெற்றிடமாக காணப்படும் சாரதி பதவிகள் 07 இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய ஊவா மாகாண சபை அரசாங்க சேவையில் உள்ள பணியாளர்களிடம் இருந்து 2026.06.26 திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. **ஆட்ச்சேர்ப்பு செய்வதற்கான பொதுவான தகைமைகள்;**

   i. சிறந்த நடத்தை உடையவராக மற்றும் சிறந்த உடல் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.
   ii. விண்ணப்பதாரரின் உயரம் குறைந்தப்பட்சம் அடி 5 ஆக இருத்தல் வேணிடும்.
   iii. பகல் மற்றும் இரவு நேரங்களில் கடமைப் புரிவதற்கான உடல் தகுதியுடனும், நல்ல கண் பார்வையுடனும் இருக்க வேண்டும். இதனை அரசாங்க மருத்துவ அதிகாரி ஒருவரினால் வழங்கப்படும் முறையான சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

- 2026.06.26 திகதி ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் சாரதி சேவையின் III ஆம் தரத்தில் காணப்படும் வெற்றிடங்கள் எண்ணிக்கையில் 30% எண்ணிக்கை இந்த வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையில் தகைமைவாய்ந்த விண்ணப்பதாரிகளினால் பூரணப்படுத்தப்படும். ஏதேனும் வெற்றிட எண்ணிக்கைக்கு அல்லது வெற்றிடங்கள் அனைத்தினையும் பூரணப்படுத்தாமல் இருப்பதற்கு அதிகாரம் உள்ளது.

| தொ. இல. | பதவி மற்றும் ஆட்ச்சேர்ப்பு செய்யம் தரம் | கல்வித் தகைமைகள்,தொழில்சார் கல்வி தகைமைகள் மற்றும் அனுபவம் | ஆட்ச்சேரப்புச் செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை |
|---|---|---|---|
| 01 | **ஊவா மாகாண அரசாங்க சேவையின் சாரதி தரம் III**<br><br>**ஆக கூடிய வயது எல்லை :**<br><br>நாட்பத்தி ஐந்து வயதிட்கு குறைந்தவராக இருக்க வேண்டும் | **கல்வித் தகைமைகள் :**<br><br>க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி உள்ளடங்களாக திறமை சித்திகள் இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**தொழில்சார் கல்வித் தகைமைகள்:**<br><br>24 டன்களுக்கும் குறைவான மொத்த வாகன எடை கொண்ட தனியார்/வாடகை வாகனம் மற்றும் ஸ்டேஷன் வெகன்களை இயக்குவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையரால் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி அனுமதி அடடையினை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(ஆட்சேர்ப்பு திகதிக்கு மூன்று (03) ஆண்டுகளுக்கு முன்னர், குறைந்தபட்சம் சி மற்றும் சி1 வாகன வகுப்பு அனுமதி அட்டையினை அல்லது புதிய சாரதி அனுமதி அட்டையின் பிரகாரம் பி வகுப்பு அனுமதி அட் டையினை பெற்றிருத்தல் வேண்டும்).<br>**மற்றும்**<br>நெடுஞ்சாலைச் சட்டங்கள் குறித்து சிறந்த அறிவினை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அனுபவம்:**<br><br>ஊவா மாகாண சபையின் கீழ் உள்ள ஒரு நிறுவனத்தில், முதன்மை கைவினைஞர் (PL1) அல்லாத அல்லது முதன்மை பகுதி-கைவினைஞர் (PL2) பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் தொடர்ச்சியான, சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான நிரந்தர சேவை காலத்தை நிறைவுசெய்து, சம்பந்தப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். | **பாடம்**<br><br>போக்குவரத்து விதிகள் பற்றிய அறிவு மற்றும் மோட்டார் இயந்திரவியல் பற்றிய அடிப்படை அறிவு<br><br>**காலம்** – 02 மணித்தியாலங்கள்<br><br>(எழுத்த மூல பரீட்சையில் சித்தியடைவதற்காக குறைந்தப்பட்சம் 40% புள்ளிகளையேனும் பெற்றிருத்தல் வேண்டும்). |

3. சம்பள அளவுத்திட்டம;

ஊவா மாகாண அரசாங்க சேவையின் சாரதி சேவை தரம் III இற்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் PL 3 - 2025 இற்கு ஏற்ப ரூ. 42,780 - 10 x 490 - 11 x 540 - 10 x 590 - 12 x 630 – 66,540/- சம்பள அளவுத்திட்டம் உரித்தாகுவதோடு. மேலே குறிப்பிடப்பட்டுள்ள இச்சுற்றறிக்கையின் உப ஆவணம் III இன் விதப்புரைகளுக்கு அமைவாக 2027.01.01 திகதி முதல் சம்பளம் வழங்கப்படும்.

4. ஆட்ச்சேர்ப்பு முறை;

I. ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அரச வர்த்தமானியில் அல்லது நாளிதழில் விளம்பரம் ஒன்றினை பிரசுரித்தோ அல்லது இணையதளத்தில் பதிவிட்டோ விண்ணப்பங்கள் வரவேட்கப்படும். விண்ணப்ப படிவங்கள் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் தகுதியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத் பரீட்சை நடாத்தப்படும். எழுத்துத் பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்கள், அவர்கள் பெற்ற புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்ச்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கும் எண்ணிக்கையின் இரண்டு மடங்கு தொழிற்சார் கல்விப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்து மூலப் பரீட்சை மற்றும் தொழிற்சார் கல்விப் பரீட்சையில் தேர்ச்சி பெறுபவர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் முன்னுரிமை வரிசைப்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

தொழில்சார் கல்வி பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| **பாடம்** | **அதிகப்பட்ச புள்ளிகள்** | **சித்தியடைவதற்கான புள்ளிகள்** |
|---|---|---|
| வாகனத்தினை இயக்குவதற்கான திறன் | 40 | 20 |
| நெடுஞ்சாலைச் சட்டங்கள் பற்றிய நடைமுறை அறிவு | 40 | 20 |
| மோட்டார் இயந்திரவியல் விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 20 | 20 |

II. எழுத்து மூல பரீட்சையில் சித்தியடைவதற்கு குறைந்தபட்சம் 40% புள்ளிகளும், தொழில்சார் கல்வி பரீட்சையில் சித்தியடைவதற்கு குறைந்தபட்சம் 40% புள்ளிகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

III. எழுத்து மூல பரீட்சை மற்றும் தொழில்சார் கல்வி பரீட்சை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும். அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நியமனத்திற்கான பெயர்களின் பட்டியல், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரினால் நியமன அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், நியமன அதிகாரியினால் நியமனக் கடிதங்களை வழங்கப்படும்.

5. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் https://exams.psc.up.gov.lk/ என்ற இணைய இணைப்பு வழியாக நிகழ்நிலை விண்ணப்ப அணுலை அணுகி 2026.06.26 திகதியன்று இரவு 11.59 மணிக்குள் அல்லது அதற்கு முன் பரீட்சைக்கான நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்த வேண்டியதுடன், விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து முறைமைக்கு சமர்ப்பித்த (Submit) பிறகு விண்ணப்பத்தின் மென் பிரதியை (மெனுவில் Applicationனை அணுகவும்) பதிவிறக்கம் செய்துக்கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் வன் பிரதியில் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டி, கையொப்பத்தை சான்றளித்து, 2026.07.03 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, எண் 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்கராவை, பதுளை"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உரையின் இடது மேல் மூளையில் **"ஊவா மாகாண**

***அரசாங்க சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2026”*** *என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.*

*6. அதேபோல, நிகழ்நிலை முறைமையின் ஊடாக முறையாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் முழுமையற்ற அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அனைத்து விண்ணப்பங்களும் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது நன்மை பயப்பதானதாக இருக்கும்.*

*குறிப்பு – நிகழ்நிலை விண்ணப்ப படிவங்ளை ஏற்றுக்கொள்ளுதல் 2026.06.01 ஆம் திகதி மு.ப. 9.00 க்கு திறக்கப்படுவதோடு, 2026 ஆம் ஆண்டு மாதம் 2026.06.26 திகதி பி.ப. 11.59 மணிக்கு நிறைவடையும்.*

*7. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்;*

*விண்ணப்ப படிவத்திலும் மற்றும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் தனது கையொப்பத்தை தனது நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.*

*8. பரீட்சை கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவுகள்;*

*8.1. பரீட்சை கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூ. 1250/- ஆகும். இக்கட்டணத்தனை ஊவா மாகாணத்தின் பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கப்பட தக்கதாக ஊவா மாகாணத்தின் காணப்படும் எந்தவொறு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பேரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப் படிவத்தில் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்பப்படல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டியது கட்டாயமாணதாகுவதோடு, எதிர்கால பயன் கருதி பற்றுச்சீட்டின் நிகழ்ப்பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயன்தக்கதாகும். ஊவா மாகாணத்தின் பிரசே செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், காசு கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாத அதேவேலை பரீட்சை கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவுகளாக செலுத்தப்பட்ட கட்டணமானது எந்தவொறு காரணத்திற்காகவும் திரும்பப் செலுத்தப்படமாட்டாது.*

*8.2. ஆட்ச்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனும் அடிப்படையில் விண்ணப்ப படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினை அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தினை சமர்ப்பித்துள்ள விண்ணப்தாரிகளுக்கு ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்ப படிவம் ஏற்றுக்ெகாள்ளப்படும் இறுதித் திகதி ஆகிய 2026. ...................... திகதியன்று இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள வெற்றிட எண்ணிக்கையை விட அதிகமான முறையான விண்ணப்ப படிவங்கள் சமர்பிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் அவ்விண்ணப்தாரிகள் சான்றிதழ் பரிசீலனை செய்யப்படாமல் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையில் அமர்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*8.3. பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்தாக அனுமதி அட்டைகள் மின்னஞ்சல் (E-mail) மூலம் அனுப்பப்படுவதோடு, பரீடசைக்காக விண்ணப்பிக்கும் போது மின்னஞ்சல் முகவரியினை சரியாக குறிப்பிடுட்டிருத்தல் வேண்டும். பரீட்சை திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்னதாக அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்ப்பில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விண்ணப்ப படிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடன் அனுமதி அட்டையினை*

அனுப்புவதற்காக வட்ஸ்அப் (WhatsApp) இலக்கம் ஒன்றினை குறிப்பிட்டு கோரிக்கை ஒன்றினை முன்வைக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக https://exams.psc.up.gov.lk/admission/ இணைப்பின் ஊடாக பரீட்சை அட்டையினை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்படும். அதற்கேற்ப இணையதளத்திலிருந்து அனுமதி அட்டையினை பதிவிறக்கம்செய்து பரிசீலித்து திருத்தங்கள் இருந்தால் குறித்த நிரையில் திருத்தப்பட வேண்டிய விதத்தினை சரியாக குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் கையொப்பம் இடபட்டிருத்தல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளை கொண்டுள்ளார் எனக் கருதப்படாது.

8.4. குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அவ்விதிமுறைகள் மீறப்பட்டால் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

8.5. பரீட்சை தினத்தன்று பரீட்சகர் தனது ஆள்அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதி அட்டை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ் ஆவணங்கள் தவிர்ந்த வேறு எந்த ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8.6. போட்டிப் பரீட்சையில் அமருவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படுவது, விண்ணப்பதாரர் குறித்த பதவிக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஒப்புதலாகக் கருதப்படாது. நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பது தெரியவந்தால், அவர் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

8.7. இந்தப் போட்டித் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். பரீட்சார்த்தி ஒருவர் முழுத் பரீட்சைக்கும் ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே அமருதல் வேண்டும். விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பிறகு, மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9. போலியான தகவல்களை வழங்குதலிற்கான தண்டனைகள்

இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக யாதாயினும் விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் என தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைப்பெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவையிட்கு நியமிக்கப்பட்ட பின்னரான சந்தர்ப்பத்தில் விண்ணபதாரர் சமர்ப்பித்த தகவல் போலியானது என அல்லது நன்கு அறிந்தும் போலியான தகவல்ளை சமர்ப்பித்துள்ளார் என அல்லது வேண்டும் என்றே உண்மையான தகவல்களை மறைத்துள்ளார் என தெரியவந்தால் அவரது பதவி வரிதாக்கப்படுவதற்கு இடமுண்டு.

இப்பதவிக்காக நியமனம் வழங்குதல் / வழங்காமல் இருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையில் ஒரு பகுதியினை பூரணப்படுத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பில் அல்லது இது தொடர்பிலான விடயம் சார்ந்த இறுதி முடிவு ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும். அதேபோல இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொறு விடயம் தொடர்பாக விளக்கமளித்தல் / தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண கௌரவ ஆளுநரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*11.* போட்டிப் பரீட்சையானது பதுளை மற்றும் மொணராகலை நகரங்களில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பரீட்சை நடாத்தப்படும் நகரம் தொடர்பில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

*12.* இது தொடர்பிலான மேலதிக விடயங்களை அலுவலக நேரத்தினுள் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலக தொலைப்பேசி இலக்கம் 0552222400, 0552231460 இற்கு அழைப்பினை மேற்கொள்ளுவதன் ஊடாக பெற்றுக்கொள்ள இயலும்.

(எல்.ஏ. சோமரத்ன)
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை
ஆணைக்குழு

2026.06.01 ஆம் திகதி,
பதுளை
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திலிருந்து.